DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**STC.No.113/2023**

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | சார்பு ஆய்வாளர் |
| பெயர் | - | திரு.தங்கராஜ் | வட்டம் | - | |
| த/பெ | - | பழனிச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | செட்டிப்பாளையம் காவல் நிலையம் | வயது | - | 59/2026 |
| சாதி | - | | | | |

**<u>04-02-2026</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது செட்டிப்பாளையம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13-10-2022-ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வளாராக பணியில் இருந்தபோது வால்பாறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப்பெற்று வால்பாறை அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த மதனகோபால் என்பவரிடம் வாக்குமூலம் புகார் பெற்று புகார்தாரரும் எதிரியும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால் மனு ரசீது 247/2022 வழங்கி விசாரணை செய்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து 20-10-2022-ம் தேதி புகாரின் தன்மைக்கு ஏற்ப குற்ற எண் 177/2022, ச/பி.341, 294(b), 323, 506(ii) இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் ச்முக வால்பாறை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான சாமிக்கண்ணு, ராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் மதனகோபால், பொன்னர், கருப்பசாமி, ராஜம்மாள், காமராஜ், சாமிக்கண்ணு, ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து எதிரி அ.சா.1 னை தடுத்து நிறுத்தியதில் உண்மை என தெரியவரவே எதிரி மீதான ச/பி 341, 294(b), 323, 506(ii) இதசவிலிருந்து ச/பி. 341-இதசாவாக மாற்றம் செய்து ச/பி மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த ச/பி மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இவ்வழக்கின் எதிரி தலைமறைவில் இருந்ததால் அவரை கைது செய்ய இயலவில்லை. பின்பு விசாரணையை முடித்து 16-02-2023-ம் தேதி எதிரிக்கு எதிராக இதச பிரிவு 341-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது விசாரணையில் எதிரிக்கும் அ.சா.1 க்கும் குடும்ப பிரச்சனை இருப்பது தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான்சொன்னது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை, குடும்ப பிரச்சனை காரணமாக அ.சா.1 கொடுத்த தவறான புகாரைப்பெற்று, நான் விசாரணையை சரிவர மேற்கொள்ளாமல் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான முன்னிடப்பட்டுள்ளவர்கள் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சாட்சிகள் அனைவரும் இவ்வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.